**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி**

**முன்னிலை திருமதி.T.நித்யகலா, B.Com., B.L.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)**
**திட்டக்குடி.**

*2023* **ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்** *09*-**ம் நாள் திங்கள்கிழமை**

**மு.வ.எண்.**76/2021

தங்கம் (எ) தங்கம்மாள்

.... வாதி

/எதிர்/

1.கதிர்வேல்
2.பாண்டியன்
3.சம்மந்தம்
4.பாப்பா
5.சுகந்தி
6.கிராமநிர்வாக அலுவலர்
7.வட்டாட்சியர்
8.மாவட்ட ஆட்சியர்

..... எதிர்வாதிகள்

இவ்வழக்கு 09.02.23 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து. வாதிக்காக வழக்கிறிஞர் திரு.சு.கார்த்திகேயன், எம்.ஏ.பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.திருவரசு, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்வாதிக்காக வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகததாலும், 3ம் பிரதிவாதி வெளிநாடு சென்றுவிட்டதால் நடவடிக்கை எதுவும் எடுக்காததாலும், 4ம் எதிர்வாதியின் சரியான விலாசம் இல்லாததால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 5ம் எதிர்வாதிக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர். 6,7,8ம்எதிர்வாதிக்காக அரசுதரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டள்ளனர். வாதியை அழைத்து வருகையில்லாததால், இன்று இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு பிறப்பிக்கும்....

<u>தீர்ப்புரை</u>

வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், வழக்கு சொத்தினில், வாதி எப்போதும் போல் அமைதியாக தொடர்ந்து அனுபோகம் செய்து வருவதை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, வேறு எவருமோ, எவ்வகையிலும் தடையோ,

இடைஞ்சலோ செய்து வழக்கு சொத்தில் அத்து மீறி பிரவேசம் செய்திடக் கூடாத வகையில் ஒரு நிலைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவினை பிறப்பிக்கும் படிக்கும், வாதியின் வழக்கு செலவினங்கள் அனைத்தும் பிரதிவாதிகளால் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல்.

3ம்எதிர்வாதி வெளிநாடு சென்றுவிட்டதால் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்காததாலும், வாதியை அழைத்து ஆஜரில்லை. எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ஆம் நாள் என்னால் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது,

(ஒப்பம்/நித்யகலா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
திட்டக்குடி.

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி**

**முன்னிலை திருமதி.T.நித்யகலா, B.Com., B.L.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)**
**திட்டக்குடி.**

*2023* **ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்** *09*-**ம் நாள் வியாழக்கிழமை**

**<u>மு.வ.எண்.76/2021</u>**

திட்டக்குடி வட்டம்,காரையூர் கிராமத்தில் வசிக்கும்,
ராஜலிங்கம் மனைவி 50 வயதுள்ள தங்கம் (எ) தங்கம்மாள் .... வாதி

/எதிர்/

1.திட்டக்குடி வட்டம்,காரையூர் கிராமத்தில் வசிக்கும்,
சபாபதி குமாரர் 70 வயதுள்ள கதிர்வேல்

2.திட்டக்குடி வட்டம்,காரையூர் கிராமத்தில் வசிக்கும்,
கதிர்வேல் குமாரர் 45 வயதுள்ள பாண்டியன்

3.திட்டக்குடி வட்டம்,காரையூர் கிராமத்தில் வசிக்கும்,
கதிர்வேல் குமாரர் 43 வயதுள்ள சம்மந்தம்

4.திட்டக்குடி வட்டம்,கிளிமங்கலம் கிராமத்தில் வசிக்கும்,
தியாகராஜன் மனைவியும் மேற்படி கதிர்வேல் மகளுமான 40 வயதுள்ள பாப்பா

5.விருத்தாசலம் வட்டம்,பெருந்துறை கிராமத்தில் வசிக்கும்,
பெரியசாமி மனைவியும் மேற்படி கதிர்வேல் மகளுமான 38 வயதுள்ள சுகந்தி

6.முருகன்குடி கிராமநிர்வாக அலுவலர், கிராமநிர்வாக அலுவலகம், திட்டக்குடி வட்டம்

7.வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திட்டக்குடி வட்டம்

8.மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் ..... எதிர்வாதிகள்

வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், வழக்கு சொத்தினில், வாதி எப்போதும் போல் அமைதியாக தொடர்ந்து அனுபோகம் செய்து வருவதை 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, வேறு எவருமோ, எவ்வகையிலும் தடையோ, இடைஞ்சலோ செய்து வழக்கு சொத்தில் அத்து மீறி பிரவேசம் செய்திடக் கூடாத வகையில் ஒரு நிலைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவினை பிறப்பிக்கும் படிக்கும், வாதியின் வழக்கு செலவினங்கள் அனைத்தும் பிரதிவாதிகளால் கிடைக்கும் படிக்கும் இவ்வழக்கு தாக்கல்.

வழக்கு தாக்கல் செய்த நாள் 12.11.2021 வழக்கின் மதிப்பு ரூ.23,940/- எனக் கண்டு அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டம் பிரிவு 25(பி), -ன் படி ரூ.720/-நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 20.08.1990, 13.10.2021ஆகிய தேதிகளில் திட்டக்குடி வட்டம், காரையூர் கிராமத்தில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு 09.02.23 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து. வாதிக்காக வழக்கிறிஞர் திரு.சு.கார்த்திகேயன், எம்.ஏ.பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.ஆர்.திருவரசு, பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்வாதிக்காக வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகததாலும், 3ம் பிரதிவாதி வெளிநாடு சென்றுவிட்டதால் நடவடிக்கை எதுவும் எடுக்காததாலும், 4ம் எதிர்வாதியின் சரியான விலாசம் இல்லாததால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 5ம் எதிர்வாதிக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர். 6,7,8மஎதிர்வாதிக்காக அரசுதரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டள்ளனர். வாதியை அழைத்து வருகையில்லாததால், இன்று இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு ஆணையிட்டு வழங்கும்....

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதி வராத தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகைப் பற்றி உத்தரவு இல்லை.

**<u>இரு தரப்பில் செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை</u>**

**<u>சொத்து விபரம்</u>**

திட்டக்குடி வட்டம், காரையூர் கிராமத்தில் அ.பு.சர்வே எண்.120/1ல் 0.02 சென்ட் ஆகும்.

நான்கெல்லை

ராஜலிங்கம் வீட்டிற்கு வடக்கு, சிமெண்ட் ரோட்டிற்கும் கிழக்கு, சிமெண்ட் ரோட்டிற்கும் மேற்கு, செல்வராஜ் இடத்திற்கும் தெற்கு சர்வே எண்.120/1ல் 0.2 செண்ட்

மனை மதிப்பு ரூ.34,880/- கல் நார் வேயப்பட்ட வீடு மதிப்பு ரூ.13,000/-

மொத்த மதிப்பு ரூ.47,880/-

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒப்பம்/நித்யகலா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
திட்டக்குடி.

<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி</u>

<u>மதிப்பு சீட்டு</u>
<u>*76/2021*</u>

| | | |
|---|---|---|
| *1.* | சட்டப் பிரிவு | *25பி),* |
| *2.* | வழக்கின் தன்மை | நிலைக்கால உறுத்துக்கட்டளை |
| *3.* | தீர்வை மதிப்பு | ரு.*23,940/-* |
| *4.* | சந்தை மதிப்பு | - |
| *5.* | நீதிமன்ற கட்டணம் | ரூ.*720/-* |

/உத்தரவுபடி/

தலைமை எழுத்தர்
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிமன்றம்,
திட்டக்குடி.